ஞாலகுருவின் படைப்புக்கள்

# குருவழிப் பயிற்சி முயற்சி



ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)


மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 புரட்டாசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"குருவழிப் பயிற்சி முயற்சி"** - 1/10/1986இல் குருதேவர் அவர்கள் வேலூர் சித்தரடியார் திரு தேவராசு என்பவருக்கு எழுதிய அஞ்சல்.
2. **"கொள்கை விளக்க அறிக்கை"** - 20/9/1986இல் அப்போதைய வடஆற்காடு மாவட்ட வேலூரில் குருதேவர் அவர்களால் வழங்கப்பட்ட கொள்கை விளக்க அறிக்கை.
3. **"பதினெண்சித்தர் பீட அறக்கட்டளை"** - குருதேவர் அவர்கள் வேலூரில் புதிய அறக்கட்டளை ஒன்றை அமைப்பதற்கான வழிமுறைகளை வழங்கிய கட்டுரையின் நகல்.
4. **"அருளாட்சி அறிமுக அஞ்சல்"** - 1/10/1986இல் குருதேவர் அவர்கள் இராசிபுரம் சித்தரடியான் திரு இராசமாணிக்கம் அவர்களுக்கு எழுதிய அஞ்சல்.
5. **"தமிழினத்தில் தோன்றிய ஆச்சாரியாரே காலடி ஆதிசங்கரர்"** - குருதேவர் அவர்கள் 29/8/1986இல் எழுதிய கட்டுரை.
6. **"தெய்வீக மருத்துவம்"** - 1969இல் குருதேவர் அவர்களால் திரு எம்.என்.இராய் அவர்களைப் பற்றியும், தெய்வீக மருத்துவம் பற்றியும் எழுதப்பட்ட நெடிய கட்டுரை.

# குருவழிப் பயிற்சி முயற்சி

செம்பியம்,
1-10-1986.

தலைவர், குருதேவர், அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், அரசயோகி, ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் சமூகத்திலிருந்து,

அருள்மிகு சூரப்பட்டு பிறம்மராக்கதர் சன்னிதானம் சித்தரடியார் திரு வெ.தேவராசுலு அவர்கள் சமூகத்திற்கு (53, கூடலூர் செங்கல்வராய முதலி தெரு, அரசமரப் பேட்டை, வேலூர்-632004), தலைமைப்பீடப் பணியாளர்களுள் ஒருவனான இளந்துறவி சுந்தரானந்தா விடுக்கும் '**செயல்விளக்கத் திருவோலை**.'

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் துணையே.

2) தாங்கள் சிந்தை நைந்து, நெஞ்சம் நொந்து, உணர்வு தளர்ந்து செயல்பட முடியாத நிலைகள் குறித்து தேதி குறிப்பிடாமல் எழுதிய உள்நாட்டு அஞ்சல் இன்று 30.9.86 மாலை கிடைத்தது. அதனை இரவு வீடு திரும்பிய குருதேவர் படித்து விட்டு உடனே கூறிய பதிலை அதிகாலையில் 1-10-86 இன்று செயல்விளக்கத் திருவோலையாக எழுதுகிறேன் நான்.

3) நமது இ.ம.இ. அமைப்பும் இதன் கீழுள்ள பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நிறுவனங்களும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் நேரடித் தலைமையின் கீழ்தான் இயங்குகின்றன. எனவே, இதில் யாரைச் சேர்ப்பதென்றாலும் சரி, யாரை நீக்குவதென்றாலும் சரி முழு அதிகாரம் பீடாதிபதிக்கு உண்டு. அங்கு மாவட்ட அளவில் உள்ள தலைவர்களோ, பூசைப்

பொறுப்பாளர்களோ, அ.வி.தி. நிறுவனத் தலைவர்களோ, வேறு நமது ஆதரவாளர்களோ செயராமனைச் சேர்த்தது பற்றியோ, சித்த வைத்தியரைச் சேர்த்தது பற்றியோ வினா எழுப்பத் தேவையற்றது அல்லது முறையற்றது என்பதைத் தெரியப்படுத்துங்கள்.

4) கோ.செயராமனை வட ஆற்காடு மாவட்ட அ.வி.தி. அமைப்பாளராக முழுநேர ஊழியராகச் செயல்படச் சொல்லியிருக்கிறார் குருதேவர். எனவே, அவர் மாவட்டம் முழுவதும் விரைந்து கிளைகளை அமைக்கட்டும். வேலூர் நகருக்குள்ளும், மாவட்டம் முழுவதும் நமது இ.ம.இ. கொடிகளை ஏற்றட்டும். அவர் தன்னுடைய விருப்பம்போல் தெரு, ஊர், வட்டாரம் என்று அ.வி.தி. தலைவர், செயலர், பொருளாளர், கிளையமைப்பாளர் முதலியவர்களை உருவாக்கட்டும். முழு அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர் எல்லோரையும் சந்திக்கவும், நம்முடைய எல்லாப் பூசைகளிலும் கலந்து கொள்ளவும் குருதேவர் ஆணையிட்டுள்ளார். இதனை யாரும் மறுப்புத் தெரிவிக்க இயலாது. அதற்கு இதுவே **குருவாணை**.

இதேபோல் சித்த வைத்தியரும் செயராமன் அவர்களோடு இணைந்தும், மற்ற நமது தலைவர்களோடு இணைந்தும் அ.வி.தி. நிலையங்களைத் தோற்றுவிக்கவும், யாகசாலைகளை அமைக்கவும், உறுப்பினர்களைச் சேர்த்துக் கிளை நிறுவனங்களை உண்டாக்கவும் முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மேற்படி இருவரும் உடனடியாகத் தங்களுடைய இருப்பிடத்தில் உயரமான கொடிக்கம்பங்களை நட்டு இ.ம.இ. கொடிகளை ஏற்றிக் கொள்ளுமாறு குருதேவர் ஆணையிட்டுள்ளார்.

5) அருள்மிகு ஆதிசங்கராச்சாரியார் எழுந்தருளி, தேவி ஆனைக்குளத்தம்மன் சன்னிதானம், திருவண்ணாமலை ஈசுவரர் பீடாதிபதி, வேலூர் பெரியவாள், கடவுளாச்சாரியார், திருஞானசம்பந்தர் பீடம், சித்தரடியார் திரு R.இராசவேல் (11, பெருமாள் கோவில் தெரு, வேலப்பாடி, வேலூர்-632001), இந்த அருட்பட்டங்களைப்

பாலாற்றங்கரைச் சுடலைப் பூசையில் அறிவித்து விடுங்கள். ஏற்கனவே செயராமனுக்கும் அருட்பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுபோல் யார் யாருக்கு அருட்பட்டங்கள் தேவையோ அவர்களுடைய புகைப்படம் அல்லது பெயர், வயது, குடும்ப விவரம் எழுதினால் அருட்பட்டம் வழங்கிடுவார் குருதேவர். ஏனென்றால் அருளுலகப் பயிற்சிகளையும், முயற்சிகளையும் செய்திடக் கூடிய மெய்யான மதவாதிகளை ஒன்று திரட்டித்தான் நமது மொழிக்கும், இனத்துக்கும், பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் வளமான வலிமையான தொண்டினைச் செய்திட முடியும்.

அதாவது, நம்மவர்கள் யாராக இருந்தாலும் சரி, அன்றாடம் ஒரு முறையாவது சிவபுராணம் ஓத வேண்டும். 108 முறை காயந்திரி மந்தரத்தையும், மந்திரத்தையும் கூறியேயாக வேண்டும். மேலும், அவரவர் வசதிவாய்ப்புக்களைப் பொறுத்து அருட்சினை மந்திறத்தைக் குறைந்தது 8 தடவையாவது கூறுவதோடு, 16, 32, 48 முறைகள் ஓதினால் நல்லது. பிறகு அவரவர் விருப்பப்படி முருகன், பிள்ளையார், கணபதி, விநாயகர், திருமால், காளி, மாரி, ... முதலியவர்களின் காயந்திரிகளை ஓதலாம். இப்படிப் பூசை செய்வதின் மூலமும்; வாராவாரம் நடக்கும் சுடலைப் பூசையிலும், ஞாயிறு யாகத்திலும் கலந்து கொள்ளுவதின் மூலமும் நம்மவர்கள் சத்தியும் சித்தியும் உடையவர்களாக ஆகவேண்டும். அப்பொழுதுதான் அவரவர்க்கும், அவரவர் குடும்பத்திற்கும், சொந்தக்காரர்களுக்கும், முடிந்தால் தெருவில் உள்ளவர்களுக்கும், ஊரில் உள்ளவர்களுக்கும், உலகத்தாருக்கும் தாங்கள் பெற்ற அருளை அநுபவப் பொருளாக வழங்கி நலம் விளைவித்துக் கொள்ளலாம்.

அதாவது குருபாரம்பரிய வாசகப்படி **‘குரு வழியாகப் பயிற்சி முயற்சிகளைச் செய்பவர்கள் அவரவர் தரத்திற்கும், திரத்திற்கும், வீரத்திற்கும், தீரத்திற்கும் ஏற்ப பூசையறையில் அகல் விளக்காகவோ, முற்றத்தின் குத்து விளக்காகவோ, தெருவின் சர விளக்காகவோ, வழிநடப்போரின் கைத் தீப்பந்தமாகவோ, கோவில் கோபுரத்து**

**விளக்காகவோ, ஊரில் பொதுமன்றில் எரியும் தெரு விளக்காகவோ அன்றி கலங்களுக்கு வழிகாட்டும் மூண்டெரியும் பெருநெருப்புச் சுடராகவோ செயல்படலாம், செயல்படலாம், செயல்படலாம்.'** எனவே, இதன்படி விரும்புகிறவர் விரும்புகிற வண்ணம் செயல்படலாம். உலகியல் பேராசைகளால் நமது திருக்கூட்டத்தை விட்டு விலகிச் செல்ல விரும்புகிறவர்கள் விலகிச் செல்லட்டும்.

6) ஐயா! நம்மிடையே உள்ளவர்களில் யார் யார் எவ்வளவு காலம் வாழப் போகிறார்கள், யார் யார் மனதிற்குள் என்னென்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், யார் யார் ஏமாற்றப் பார்க்கிறார்கள், யார் யார் ஏமாறப் போகிறார்கள் என்ற உண்மைகள் அனைத்தும் குருதேவருக்குத் தெரியும். எனவே, குருவாணைப்படி செயல்பட மயங்குகிறவர்களும், தயங்குகிறவர்களும், குருவாணையையே எதிர்த்துக் கேள்வி கேட்டுக் குழப்பமாகச் செயல்படுபவர்களும் தங்கள் விருப்பம் போல் சிறிது காலம் விலகி ஒதுங்கிச் செயல்படட்டும். இது அவரவர் ஊழ்வினையின்படி நடப்பதாகும். எனவே, யார் மீதும் வருத்தப்பட வேண்டாம். யாரையும் தவறாக எண்ண வேண்டாம். நம்மோடு ஒத்து வராதவர்கள் விலகியிருப்பதே நல்லது.

7) ஐயா, இன்றைக்கு நாடு இருக்கின்ற நிலையில் வேலூரில் தாங்கள், ஓவிய ஆசிரியர், தலைமை ஆசிரியர், இராணுவ அதிகாரி, வணிகப் பெருமக்கள், நமது சுப்பையா B.E., புதிய இளைஞர்கள், ... என்று பலர் ஒன்று கூடி ஒற்றுமையுடன் **மெய்யான இந்துமத** மறுமலர்ச்சிக்காக ஏதாவது செய்தேயாக வேண்டும் என்று முயற்சிக்கும் நிலை உருவாகியிருப்பதே நமக்கு மாபெரும் வெற்றி! வெற்றி! வெற்றி! அதாவது, மாபெரும் அரசியல் கட்சிகளிலோ, கலை இலக்கிய சமுதாய தொழில் துறைக் கட்சிகளிலோ இன்றைய நிலையில் 2, 3 பேர் கூட ஒற்றுமையுடன் செயல்படும் நிலை இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. ஆனால், நமது குருதேவரின் தலைமையில் வேலூர் போன்ற பெரிய பெரிய நகரங்களிலும், சிறிய சிறிய கிராமங்களிலும் கூட பத்துப் பதினைந்து

பேர்கள் ஒற்றுமையோடும், ஒருமைப்பாட்டோடும், கட்டுப்பாட்டோடும் குருதேவரின் செயல்திட்டங்களைச் செயலாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவற்றிற்கு மேல் நாம் நமது கொள்கைகளை விளக்கி மாதாமாதம் ரூ.1/- விலையில் வெளியிடும் குருதேவர் அறிக்கை 30க்கும் மேல் வெளிவந்து விட்டன. இவையல்லாமல் 10 காசு விலையிலிருந்து ரூ. 10/- விலையுள்ள புத்தகங்கள் வரை பல வெளியிட்டிருக்கிறோம் நாம். நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் நாடெங்கும் நமக்கு இருக்கின்றன. நமது சொற்பொழிவுகளை ஆயிரக்கணக்கில் மக்கள் சிந்திக்கும் நிலை உருவாகியிருக்கிறது. எனவே, நீங்கள் மிகமிகச் சாதாரணமாகச் சிலர் ஒத்துழையாமல் இருப்பதற்காக மன அமைதி இழந்து வருந்தக் கூடாது. வேலூருக்குள்ளேயே ஏதேனும் ஒரு கோயிலில் அல்லது மடத்தில் நமது அறக்கட்டளையைப் பதிவு செய்து செயலாக்குங்கள். உங்களைத் தலைவராக நியமித்திருப்பதற்கு ஏற்பச் சுறுசுறுப்பாக வீரத்தோடு செயல்படுங்கள். இதனை அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள்.

அன்பு
சுந்தரானந்தா,
1.10.86.

<u>நகல் தயாரித்தவர்</u>:-

அன்பு

M.R.சீனிவாசன் R.M.P., 90 தென்கள்ளர் தெரு, முசிறி, திருச்சி(Dt).
PIN: 621211; 3.10.1986.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: முசிறிச் சித்தரடியார் திரு M.R.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# வ.ஆ.மாவட்ட வேலூரில் வழங்கப்பட்ட

# கொள்கை விளக்க அறிக்கை

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

**அறிக்கை எண்: 18 நாள்:- 20.9.86**

**ஞானச்சாரியார் குவலய குருபீடம்**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

19.9.86 முதல் 22.9.86 முடிய வேலூர் நகரில் அருள்வழங்குகிறார். சனிக்கிழமை மாலை பிறம்மஞான சபையிலும், இரவு ஆசிரியர் இல்லத்திலும் அருளுரை வழங்குகிறார். சலவன்பேட்டை அம்மணாங்குட்டை மடத்தை பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடத்தின் கீழ் ஏற்று; வரும் 6வது பருவபூசையிலும் எழுந்தருளி அருள் வழங்கினார். மக்களுக்கு **மெய்யான இந்துமதம்** *பொய்யான ஹிந்துமதம்* என்ற இரண்டையும் பற்றி கருத்துரை வழங்கினார்.

கடலுள் மறைந்த குமரிக்கண்டம் எனப்படும் இளமுறியாக் கண்டத்தில் இன்றைக்கு 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால்தான் **மெய்யான இந்துமதம்** தோற்றுவிக்கப்பட்டது. இதனைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் விண்வெளியிலுள்ள அண்டங்களிலிருந்து இம்மண்ணுலகில் கல்தோன்றி மண்தோன்றாக் காலம் முதல் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள்.

விண்வெளியிலிருந்து வந்த அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடுநிலையினர்கள், 108 திருப்பதி நிலையினர், 243 சத்திபீட நிலையினர், 1008 சிவாலய நிலையினர், ... இம்மண்ணுலகில் தங்கி அருளை அநுபவப் பொருளாக வழங்கி வருகிறார்கள்.

அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான தெய்வீக அமுதத் தமிழ்மொழியே பத்தி, சத்தி, சித்தி, முத்திகளை வழங்கும்; மண்ணையும், விண்ணையும் இணைக்கும்.

**மெய்யான இந்துமத**த்தின் மிகத் தெளிவான உயிர்நாடியான தத்துவம் முன்னோர்களை வழிபடலும் (The Worship of the Ancestors), மூத்தோர்களை மதித்தலும் (Respecting the Elders). குருவழியாகத்தான் ஒவ்வொரு மனிதரும் அவரவருடைய பழம்பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் உரிய ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் தனித்தனியாகப் பிரித்து, தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, உணர்ந்து, குருவருளால் ஒன்றுசேர்க்கப்படல் வேண்டும். ஊழ்வினை, வினை, சூழ்வினை, ஆள்வினை முதலியவற்றின் பாதிப்புக்களை அருளூறு பூசைமொழிகளை ஓதியும், பூசைகளைச் செய்தும், குருவழி வாழ்ந்தும் வென்றிடலாம். எல்லா மனிதரும் குருவருளால், குருவின் துணையால் கடவுளாகலாம்.

இம்மண்ணுலகில் தோன்றிடும் அனைத்து வகையான அருளாளர்களும் **மெய்யான இந்துமதம்** என்கின்ற கனிமலர்ச்

சோலையிலே காய்த்த கனிகளே, பூத்த மலர்களேயாவார்கள். எனவே, எந்தவித மத மொழி இன வேறுபாடுகள் இல்லாமல் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், சுருதிகள், ஆரணங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், நேமங்கள், நியமங்கள், நிடதங்கள், நிட்டைகள், நீதிகள், ஓமங்கள், ஓகங்கள், யாகங்கள், யக்ஞுங்கள், வேள்விகள், தவங்கள், ஞானங்கள், பூசைகள், மந்திறங்கள், மந்திரங்கள், மந்தரங்கள், தந்திறங்கள், தந்திரங்கள், தந்தரங்கள், எந்திறங்கள், எந்திரங்கள், ஏந்தரங்கள், ... முதலியவகளைப் பயன்படுத்தி அருளை அனுபவப் பொருளாகப் பெறலாம்.

தலைமைப் பணியாளர்,
**அஹுதி சங்கராச்சாரியார் பீடம்,**
துறவி சுந்தரானந்தா.

**//உண்மை நகல்//**

**//மூலநகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# பதினெண்சித்தர் பீட அறக்கட்டளை

இன்றைய குவலய குருபீடம், குருதேவர், ஞாஞச்சாரியார், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகச் செயல்பட்டு இந்து மறுமலர்ச்சிக்காக நிறுவி வரும் அறக்கட்டளைகளுள் வடஆற்காடு மாவட்ட வேலூர் சலவன்பேட்டை அம்மணங்குட்டை மடம் எனப்படும் தொடைதட்டி அருணசல சுவாமிகளின் மடமும் ஒன்றாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறக்கட்டளையை பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடத்தின் நிறுவன நிர்வாகத்தின் கீழ் என்றென்றும் நிகழ்த்திட அறக்கட்டளை ஆதீனம், அறக்கட்டளைப் பண்டார சன்னதி, அறக்கட்டளைத் தம்பிரான் எனும் மூவரின் தலைமையின் கீழ் அறக்கட்டளைக் குழு பொதுமக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்படுகின்றது. இக்குழுவினர் கீழ்க்கண்ட பணிகளைச் செய்வார்கள்.

1) கோயில் திருப்பணி.
2) கோயிலில் தொடர்ந்து ஆறுகாலம் பூசை நிகழச் செய்தல்.
3) கோயில் திருக்குளம் காத்தல்.
4) நந்தவனம் அமைத்தல்.

5) இந்துமத வேதபாடசாலை அமைத்தல்.
6) பெரியவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இந்துமதக் கல்வி வழங்கல்.
7) யாகசாலை சித்தர்நெறிப்படி அமைக்கப்பட்டுத் தேவைக்கேற்ப வாரத்தில் சில நாட்கள் யாகமும், அமாவாசை வேள்வி, மூன்றும் பிறைத் தொழுகை, பருவபூசை முதலியவையும் நிகழ்த்தி அருளை அநுபவப் பொருளாக வழங்குதல்.
8) இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும் தொண்டர்களைத் தயாரித்தல்.
9) அருட்பணி விரிவாக்கத்திற்காக அருட்கலைஞர்களை உருவாக்குதல்.
10) பாழடைந்த கோயில்களைப் புதுப்பித்தல்.
11) சித்தர்நெறி தொடர்பான புத்தகங்களை வெளியிடல்.
12) முதியோர் இல்லமும், முதியோர் கல்வி நிலையமும் நிறுவுதல்.
13) தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், இந்துமதச் செழிச்சிக்காகவும் நூலகம் நிறுவுதல்.
14) ஏழைகளுக்கு இலவச மருத்துவமனை அமைத்தல்.
15) சிறுதொழில் வழங்கி வேலையற்றோர்களுக்கும், ஊனமுற்றோர்களுக்கும் உதவுதல்.
16) ஓகாசன, யோகாசன உடற்பயிற்சிக் கலைகளும், சேவலோன் கலைகளும் முறையாக அருட்செல்வத்தை வளர்ப்பதற்காக கற்றுத் தரப்படும்.
17) பதினெண்சித்தர் மரபுப்படி தமிழில் மறைகளை ஓதி **மெய்யான இந்துமத** முறைப்படி திருமணங்கள் செய்து வைக்கப்படும்.

18) பள்ளி மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் இனமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குதல்.

இப்பணிகள் அனைத்தையும் கீழ்க்கண்டவர்கள் பதினெண்சித்தர் பீடாதிபதியின் நேரடித் தலைமையின் கீழும், வழிகாட்டலின் கீழும் நிகழ்த்தி வருவார்கள். இதற்காக இம்மடத்துக்குரிய சொத்துக்களன்றி நன்கொடையும் பெற்று இந்த அறக்கட்டளை செயல்படும். தேவைக்கேற்ப இதற்கு நிறுவன நிருவாகக் குழுவும் உருவாக்கப்படும்.

ஆதீனம் - வே. தேவராசுலு - தலைவர்.

பண்டார சன்னிதி - இராசாபாதர் - செயலாளர்.

தம்பிரான் - முனிரத்தினம் - பொருளாளர்.

அறக்கட்டளை நிறுவன நிருவாகக் குழுவினர்.

**நகல் தயாரித்தவர்:-** விருதுநகர் மாரியம்மன் சன்னிதானம், பிறம்மயோகி சித்தரடியான் M.S.R. மாரியப்பன், 49A, டவுன்ஹால் ரோடு, மதுரை - 625001; 4/10/86.

**//உண்மை நகல்//**

**//மூலநகல்: பிறம்மயோகி சித்தரடியான் திரு M.S.R.மாரியப்பன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>அருளாட்சி அறிமுக அஞ்சல்</u>

தலைவர், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், குவலய குருபீடம் அவர்களின் தலைமைப் பணியாளர்களுள் ஒருவனான இளந்துறவி சுந்தரானந்தா, அனாதி சங்கராச்சாரியார் பீடம் 1/10/86 அன்று விடுக்கும் <u>அருளாட்சி அறிமுக அஞ்சல்</u>.

K.இராசமாணிக்கம், பார்பர் சாப், 72, கச்சேரி தெரு, இராசிபுரம் அவர்களுக்கு விடுக்கப்படுவது.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் துணையே.

2) தாங்கள் 22-9-86இல் இராசிபுரத்திலிருந்து தமிழில் எழுதி ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டு அனுப்பிய அஞ்சலினைக் கண்டார் குருதேவர். தங்களுக்குப் பொறுப்பாளர் சி.கவிக்குமாரின் சார்பாக இரா.சீனிவாசன் அவர்கள் உடனடியாக அஞ்சல் அனுப்பியிருப்பார். அடுத்து குருவாணைப்படி யாம் தங்களுக்கு அஞ்சல் அனுப்புகிறோம்.

3) நண்ப! இந்துமதத்தின் அடிப்படையாகவே உள்ள காளியம்மனை வழிபடும் சலவைத் தொழிலாளர்களும், மாரியம்மனை வழிபடும் முடிவெட்டும் தொழிலையும் செய்யும் மருத்துவர்களும்தாம் இதுவரை நாட்டில் நடந்துள்ள சமய சமுதாய அரசியல் புரட்சிகளில் முதன்மையான சிறப்பான பெரும்பங்கைப் பெற்றுள்ளார்கள். அரச பாரம்பரியமும், குருபாரம்பரியமும் இந்த இருவகைத் தொழிலாளர்களைத்தான் வேளிர்களின் கைகளாகவும், அரியணையில்

இருப்பவர்களின் கண்களாகவும் போற்றுகின்றன. தாங்கள் தங்களுடைய ஆற்றலுக்கும், வசதிவாய்ப்பிற்கும் ஏற்ப சேலம் மாவட்ட அளவிலோ அல்லது அ.வி.தி. அமைப்புப் பணியிலோ ஈடுபடலாம். தங்களுக்கு ஊழ்வினைப்படியும், வினைப்படியும் உலகியலில் அரிய, பெரிய சாதனைகளைச் சாதிக்கும் திறமுண்டு. இதனை வீணாக்கி விடாதீர்கள். உங்களுடைய கையெழுத்தைப் பார்த்தும், அஞ்சல் வாசகங்களைப் படித்தும் குருதேவர் உங்களை அருட்கணிப்புச் செய்து இந்த அஞ்சலை அனுப்பச் சொன்னார். எனவே, வாரம் ஒருமுறையாவது உங்களுடைய செயல்நிலைகளைப் பற்றித் தவறாமல் அஞ்சல் எழுதுங்கள்.

4) நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம், பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியான **மெய்யான இந்துமத**ப்படியே செயல்படுகிறது. எனவே, சாதியின் அடிப்படையிலோ, தொழிலின் அடிப்படையிலோ, ஏழை பணக்காரர் என்ற அடிப்படையிலோ, ... எந்த விதமான வேறுபாடும் நம்மிடையே பாராட்டப் படுவதில்லை! பாராட்டப் படுவதில்லை! பாராட்டப் படுவதில்லை!

5) தாங்கள் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ, தங்களுடைய சொந்தக் காரர்களையும், நண்பர்களையும் அ.வி.தி. அமைப்பில் உறுப்பினர்களாக்குங்கள். உறுப்பினர் தாள்களும் இத்துடன் அனுப்பப் படுகின்றன. ஒவ்வொரு தாளிலும் 25 பேர்கள் பதிவு செய்து ஒரு கிளையமைப்பாளர், செயலர், தலைவர், பொருளாளர் என்ற பதவியினரை உருவாக்குங்கள். அ.வி.தி. கொடியும், இ.ம.இ. கொடியும் ஏற்றி யாகசாலை வைத்து மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்குங்கள். நமது அறிக்கைகளையும், புத்தகங்களையும், கொள்கை விளக்கங்களுக்காக அனைவருக்கும் வழங்குங்கள். ஒவ்வொருவரிடமும் மாதாமாதம் ரூ.2/- காணிக்கை பெற்று ரூ.1/-ஐ தலைமைப் பீடத்திற்குச் சந்தாத் தொகையாகவும், மீதி ரூ.1/-ஐ அந்தந்த வட்டாரத்திலுள்ள யாகசாலையில் வருபவர்கள் செய்யும் செலவாகவும், பொது

உறுப்பினர்களுக்கு அஞ்சல் வழியாக யாகச்சாம்பலும், குங்குமமும் அனுப்புவதற்கு ஆகும் செலவாகவும் பயன்படுத்த வேண்டும். அவசர அவசியமாக இந்துமத விளக்கமும், தந்தை பெரியார் பற்றிய விளக்கமாக இரண்டு புத்தகங்கள் அனுப்பப்படுகின்றன. அஙுதிசங்கராச்சாரியார் பீடம், இராசிபுரம் பெரியவாள், கடவுளாச்சாரியார், சிதம்பரம் நடராசப் பெருமான் சன்னிதானம், திருவரங்கம் பெருமால் ஆதீனம், மதுரை மீஞட்சியம்மன் தம்பிரான் என்ற அருட்பட்டங்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்று முதல் சித்தரடியார் இராசமாணிக்கம் என்று அருட்பட்டங்களோடு சேர்த்துப் பூசையில் ஓதி சத்தி சித்தி பெறுங்கள்.

அன்பு
சுந்தரானந்தா,
1/10/86.

**//உண்மை நகல்//**

**நகல் நல்குபவர்: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி.**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# தமிழினத்தில் தோன்றிய ஆச்சாரியாரே காலடி ஆதிசங்கரர்

## கருவூர்த் தேவரின் குருபாரம்பரிய வாசகங்கள்

கி.பி.785க்குப் பிறகு கருணீக்கச் சைவவேளாளர் குலத்தில் தோன்றிய காலடி ஆதிசங்கராச்சாரியார் தமிழராகப் பிறந்திருந்தும், ஒரு வடஆரியராக விளம்பரப் படுத்தப்பட்டார். அவர் சித்தர் நெறிப்படி வெள்ளாடை மேனியராகவும், உச்சிக் குடுமியராகவும் வாழ்ந்திட்ட போதிலும் அவரை வடஆரிய நெறிக்குட்பட்ட காவி உடை மேனியராகவும், மொட்டைத் தலையராகவும் சித்தரித்து விட்டார்கள். இதனால் தமிழினத்தில் தோன்றிய மாபெரும் ஆச்சாரியார்களில் ஒருவர் வடஆரியரால் தங்களுக்குரியவராகத் தத்தெடுக்கப்பட்டு விட்டார். இதனால் தமிழினத்திற்கும், மதத்திற்கும், மொழிக்கும், பண்பாட்டிற்கும்,... மிகப்பெரிய நலிவையும், மெலிவையும், நோய்நிலையையும், தேய்நிலையையுமே விளைவித்துக் கொடுத்திட்டார்கள் வடஆரியர்கள்.

ஏனெனில், கருவூர்த் தேவர் தமது குருபாரம்பரிய வாசகத்தில் மிகத் தெளிவாக

"... முப்பத்திரண்டாவது பீடமாகத் தோன்றிய காலடி ஆதிசங்கராச்சாரியாரோடு கலியுகத்திற்கு ஐந்து சமயாச்சாரியார்கள் கிடைத்திட்டார்கள். இதில் மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் எனும் நால்வரும் இந்துமதத்தின்

மூலமொழியான தமிழ்மொழியிலேயே அனைத்து வகையான தத்துவ தத்துவாந்த, சித்த சித்தாந்த, நாத நாதாந்த, போத போதாந்த, ஓத ஓதாந்த, மறை மறையாந்த, முறை முறையாந்த, நெறி நெறியாந்தக் கருத்துக்களை யெல்லாம் அருளுலக அநுபவங்களோடு விளக்கினார்கள். இந்த நான்கு சமயாச்சாரியார்களின் கருத்துக்களின் சாரத்தைச் சாத்திறத் தோத்திறங்களாக இம்மண்ணின் அன்னியர்களான வடஆரியர்களுக்கு விளக்கியுரைத்தவரே காலடி ஆதிசங்கராச்சாரியார்.

ஏனெனில், பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பெரியபெரிய நகரம் முதல் குக்கிராமம் வரை பரவியிருந்தனர். இந்தப் பிருமணர் மூலம்தான் எளிதாக இந்துமதக் கருத்துக்களைப் பரப்பி இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற முடியும் என்று; காலடி ஆதிசங்கராச்சாரியாரை சமசுக்கிருத மொழி வழியாகச் செயல்படச் செய்தார் பதிமூன்றாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.

இவர், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தேவகுமாரனாக இசுரவேல் நாட்டில் தோன்றிய ஈசாவைப் (ஈசுவரனை => ஈசாவை) பதினெட்டாண்டுகள் அருளுலகப் பயிற்சிகளாலும், முயற்சிகளாலும் தயாரித்தது போலத் தம் காலத்தில் முப்பத்திரண்டாவது பீடமான ஆதிசங்கராச்சாரியாரை அருளுலக மறுமலர்ச்சிக்காகத் தயாரித்தார்.

இந்த இருவருமே (ஈசாவும், ஆதிசங்கராச்சாரியாரும்) முப்பத்துமூன்று ஆண்டுகளே வாழ்ந்த போதிலும், அருளுலகில் நிலையான பெருஞ்சுடர்களாக விளங்கி வருகிறார்கள். இருந்த போதிலும் **இந்த இரண்டு பேர்களுமே பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் உருவாக்கப் பட்டவர்கள்** என்ற மாபெரும் உண்மை மறைக்கப்பட்டும்,

மறக்கப்பட்டும் விட்டதால் சித்தர்நெறி எனும் இந்துமதம் தமிழர்களுக்கு விருந்தாகவோ அல்லது மருந்தாகவோ பயன்பட முடியாத இரண்டும் கெட்டான் நிலை உருவாகிவிட்டது, உருவாகிவிட்டது, உருவாகிவிட்டது. இதுவே தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவதற்குக் கருவாக அமைந்து விட்டது.

**ஈசாவின் வாசகங்களிலும், ஆதிசங்கராச்சாரியாரின் வாசகங்களிலும் பதினெண்சித்தர்களின் தெய்வத் தீந்தமிழ்ச் சொற்களும், எழுத்தொலிகளும், கருத்தின் பிரதிபலிப்புக்களும், செயல்திட்டங்களின் எதிரொலிகளும், ... மிகுதியாக இருப்பதை என்றைக்குத் தமிழர்கள் கண்டுபிடிக்கிறார்களோ, அன்றைக்குத்தான் தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பது தடுக்கப்பட்டிடும், அகற்றப்பட்டிடும்,.....”**

என்று குறிக்கிறார்.

இப்படிக் கருவூர்த் தேவர் தனது குருபாரம்பரிய வாசகங்கள் மூலம் தனது தந்தையான தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி காவிரியாற்றங்கரைக் கருவூராரின் கனவுகளை நனவாக்குகிறார்.

**- இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், குவலய குருபீடம்,**
**அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார்,**
29/8/1986.

<u>நகல் தயாரித்தவர்</u>:-

அன்பு / M.R.சீனிவாசன் RMP, 90 தென்கள்ளர் தெரு, முசிறி(P.O.), திருச்சி(Dt.) PIN: 621211; 6/9/1986.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: முசிறிச் சித்தரடியார் திரு M.R.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

16/2/69

# தெய்வீக மருத்துவம்

## Mystical Treatment

**சித்தர்**

**மத ஆய்வாளர்.**

மிகப் பெரிய அரசியல்வாதியும்; பகுத்தறிவுச் சிந்தனையாளருமான எம்.என்.ராய் (M.N.Roy 1887-1954) அவர்கள் இந்தியாவின் அரசியல் விடுதலைக்காக உலக நாடெங்கும் சுற்றியலைந்தவர். அவர், இந்தியாவின் விடுதலையை நாடிய ஒரு விடுதலை இயக்க வீரராகவே இந்தியாவை விட்டுச் சென்றார். ஆனால், அவருக்கு ஏற்பட்ட வாய்ப்புக்களும், வாய்த்திட்ட சூழ்நிலைகளும் அவரை ஓர் உலகப் பொதுவுடமைவாதியாக (International Communist) மாற்றிற்று.

அவர், 'இந்தியாவின் விடுதலை' ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு மேல்நாடு சென்றவர். இருந்தும், அவர் தான், புதிதாக ஏற்றுக் கொண்ட பொதுவுடமைக் கொள்கைகள் செயலாக மலர்ந்த இரசிய (RUSSIA) நாட்டில் வாழப் பெரிதும் விரும்பினார். அதனால், அவர் அங்கே சென்று சில ஆண்டுகள் வாழ்ந்தார். அவர், அந்நாட்டு அரசியலில் பெரும்பங்கு வகித்தார்.

அவரது அறிவுக் கூர்மையும், ஆற்றல் திறனும், உழைக்கும் ஆர்வமும் அவரை உலகப் பொதுவுடமைவாதிகளுள் சிறந்தவராக ஆக்கிற்று. ஆனால், உலக அரசியல் வாழ்வில் அவருக்குக் கிடைத்த அநுபவங்கள்; அவரை, அரசியல் உலகிலிருந்து விலகச் செய்தன. அரசியல்வாதியான அவர், அன்றாட வாழ்க்கைப் பிறச்சினைகளைச் சிந்திக்கும் சமுதாயச் சிந்தனையாளராக மாறினார்.

அவர், தனது வாழ்வின் அரசியல் கருத்துக்களையும், அநுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தார். அதன்பிறகே, அவர், "அரசியல் மாற்றத்தால் மனித வாழ்வில் நிலையான அமைதியையும், ஒற்றுமையையும், மகிழ்ச்சியையும் நிறுவ முடியாது" என்ற முடிவிற்கு வந்தார். அவரது அந்த முடிவு, செயலாக மலர்ந்ததுதான் "உலக மத ஆய்வுக் குழு" (The World Religious Research Society).

அவர் 'அரசியல் மாற்றத்தால் ஏதும் பயனில்லை' என்ற முடிவிற்கு வந்திட்டார். அதனால், அவர் சமுதாயச் சீர்திருத்தத்தில் (Social Reformation) ஈடுபாடு கொண்டார்.

அவருக்கு, "மக்களை மதங்களின் வன்மையான பிடியிலிருந்து விடுவித்து விட்டால் மனிதத் தன்மை உருவாகிடும்" என்ற எண்ணம் பிறந்தது. அதனால், அவர் தன்னால் இயன்ற அளவு மதத் தலைவர்களையும், தெய்வீக ஆற்றலுடையார்களையும், விஞ்ஞானிகளையும் (Religious Heads, Mystics & Scientists) சந்தித்து வாதிட்டார். அவரது அம்முயற்சி; அவரது கருத்துக்களையும், குறிக்கோள்களையும் குதிரைக் கொம்பாக்கின. இருந்தாலும், அவர் மனம் தளரவில்லை.

அவரது இடைவிடா முயற்சியால், உலகெங்கும் "மத ஆய்வாளர்கள்" (Religious Research Scholars) தோன்றினார்கள். ஆனால், அவர், இம்மத ஆய்வாளர்கள் ஒன்றுசேர்ந்து "உலக மத ஆய்வுக் குழு"வை (The World Religious Research Society) என்றும் உருவாக்க முடியாத நிலையிலிருப்பதை உணர்ந்து வருந்தினார்.

அவர், ஆங்கில அரசின் கெடுபிடிகளுக்கிடையிலும்; இந்திய அரசியல் போராட்டங்களுக்கிடையிலும் நாடெங்கும் சென்று தனது பகுத்தறிவுப் பணியை நிகழ்த்தினார். அவர் தனது கொள்கை விளம்பரமாவதால் மட்டும் எவ்விதப் பயனும் ஏற்படாது என்று தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால், அவர், தான்

செல்லுமிடங்களிலெல்லாம்; தெய்வீகத் துறையில் ஆர்வமுள்ளவர்களையும், ஆற்றலுள்ளவர்களையும் சந்தித்து "மத ஆய்வுக் குழு" அமைய வித்திட்டார்.

அவரிட்ட வித்துக்கள் முளைத்தனவா? முளைத்தவை செழித்தனவா? செழித்தவை நல்ல அறுவடையை நல்கினவா? .... என்ற வினாக்களுக்கு விடையாகவே; கடந்த ஓராண்டு காலமாகத் "தெய்வீக மருத்துவம்" (Mystical Treatment) செயல்பட்டு வருகின்றது. (அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி 6).

அவர், "மத ஆய்வுக் குழுவானது மதக் கொள்கைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், .... (Religious Principles, Beliefs, Customs and Manners) முதலியவைகளை முறைப்படி ஆராய வேண்டும். அதன்மூலம், இவற்றால் நாட்டுக்கு நன்மை உண்டா? இல்லையா? என்பது தெளிவாக்கப்படல் வேண்டும்" என்று விரும்பினார். இவரது விருப்பம் விரிந்த அளவில் செயலாகா விட்டாலும்; இந்தியா, அமெரிக்கா, இத்தாலி, இரசியா, செர்மனி ... முதலிய நாடுகளில் ஓரளவு செயலாகி வருகின்றது. இதில், இந்தியாவைப் பொறுத்தவரையில், மத ஆய்வுக் குழுவின் சாதனை "தெய்வீக மருத்துவமாக" மக்களின் அன்றாட வாழ்வுக்குப் பெருநலம் பயக்கும் நிலையை அடைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியாவிலுள்ள மதங்களின் அடிப்படைத் தத்துவமும்; கோவிலமைப்புக்களின் உயிர்நாடியும் சித்தர்கள் (SIDDHARS) எனப்படும் தெய்வீகக் கலைஞர்களையே சார்ந்துள்ளன. அச்சித்தர்களின் சிந்தனைகள் தமிழ்மொழியில் இருப்பதாலும்; அச்சித்தர்களின் பரம்பரை தமிழகத்திலிருப்பதாலும் "இந்திய மத ஆய்வுக் குழு", தமிழகத்தில் அமைக்கப்பட்டுச் செயல்படலே சாலச் சிறந்தது என்று எம்.என்.ராய் கருதினார். அதற்கேற்ப, அவருக்குப் பல தமிழர்கள் நண்பர்களாகக் கிடைத்தனர். இந்திய மத ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. அதன் செயல்முறை 'பகுத்தறிவு நோக்கத்துடனும், விஞ்ஞானச் சூழலிலும்'

வகுக்கப்பட்டது. (With a rationalistic approach and a scientific atmosphere).

இந்திய மத ஆய்வுக் குழு, பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நேபாளம், வங்காளம், கோவா, குடகு, நாகார்சுன மலைச்சாரல், தமிழ்நாடு ... முதலிய இடங்களில் செயல்படலாயிற்று. தமிழ்நாட்டில் செயல்பட்ட மத ஆய்வுக் குழுவின் பெரும் பொறுப்பு கடைசியாக என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

என் பணி துவங்கிற்று. எனது பணியில், முதலில், கோயில்களுக்குரிய "தந்தரம்", "தாந்தரம்", "தாந்தரீகம்" (Tantric Arts) என்ற முப்பெரும் தெய்வீகக் கலைகளுக்கும் தெளிவான இலக்கியங்களும், செயல்முறைகளும் (both Literature and Practical Methods) வகுக்கப்பட்டன. ஆனால், இவை, நேரடியாகவும், உடனடியாகவும் (Direct & Immediate) சமுதாயத்துக்குப் பயனளிப்பன அல்ல.

உயர்திரு எம்.என்.ராய் அவர்கள், "மத ஆய்வுக் குழுவின் சாதனைகள் வெறும் அறிவியல் பாராட்டாகவோ, விருந்தாகவோ (Mere Intellectual appreciation and Feast for intellectual appetite) அமைந்துவிடக் கூடாது" என்று தெளிவாக வலியுறுத்திச் சென்றுள்ளார். அதோடு, அவர், "மக்களுக்கு ஊசிமுனை அளவாவது நன்மை பயக்கக் கூடியது எதுவாக இருந்தாலும்; அதை நம்பலாம், ஏற்றுக் கொள்ளலாம்" என்ற கருத்துடையவர். மேலும், அவர் எந்தச் சாதனையானாலும்; அது உடனடியாக, நேரடியாக மக்களுக்குப் பயனளிக்க வேண்டுமென்று விரும்பியவர்.

அவருடைய விருப்பத்திற்கேற்ப; மக்களுக்கு உடனடியாகவும், நேரடியாகவும் பயன்படக் கூடியவை "மந்தரம்", "மாந்தரம்", "மாந்தரீகம்", "தவம்", "வேள்வி", "சித்தம்" ஆகிய ஆறு தெய்வீகக் கலைகளே (Divine Arts). அதனால், என் பணி இந்த ஆறு கலைகளிலும் நிலைத்தது.

தனி மனிதனின் நலனுக்குரியது **தவம்**. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குரிய மக்களின் கூட்டு முயற்சியால்; அவர்களுக்கு மட்டும் நலம் பயப்பது **வேள்வி**. உலகம் முழுவதற்கும் நன்மை பயக்குமாறு தனிமனிதனும், ஒரு கூட்டமும் முயன்று முடிப்பது **சித்தம்**. இம்மூன்று தெய்வீகக் கலைகளும் குமரி முதல் இமயம் வரை பல்வேறுவகையான கருத்து வடிவங்களும், செயல்முறைகளும் உடையவை. அதனால் இம்மூன்று கலைகளுக்கும் இலக்கியங்களையோ, செயல்முறைகளையோ அமைப்பது மிகப் பெரிய முயற்சியாக இருக்க வேண்டும். அத்தகைய முயற்சிக்கு அரசும், மக்களும் பெருமளவில் ஒத்துழைத்தால்தான் முடியும். எனவே, நான், இக்கலைகள் பற்றிய எனது கருத்துக்களை ஒருநிலைப்படுத்திக் கொண்டதோடு என் பணியை நிறுத்த நேரிட்டுவிட்டது.

மீதியுள்ள ***மந்தரம்***, ***மாந்தரம்***, ***மாந்தரீகம்*** என்ற முப்பெரும் தெய்வீகக் கலைகள் மனித உடல், உயிர், பிற பொருள்கள், தெய்வீக உலகு, கோள்கள் (planets), மீன்கள் (stars) ..... முதலியவற்றை இணைப்பவை. மேலும் இம்முப்பெரும் கலைகளே மனிதனின் பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி, நரை, திரை ... முதலிய மாற்றங்களுக்கு விளக்கம் கொடுக்கக் கூடியவை. அதனாலேயே, எனது பதினான்காண்டு உழைப்பு இம்முப்பெரும் கலைகளுக்கே பெருமளவில் அளிக்கப்பட்டது.

நான், இம்முப்பெரும் கலைகளின் சாதனைகளை அவ்வப்போது அரசுக்கும், மற்ற மத ஆய்வாளர்களுக்கும் அறிவித்தேன். எனது கண்டுபிடிப்புக்கள் கருத்தளவிலேயே நின்றன. அவை, செயலாக வேண்டுமானால்; ஒருசில குறிப்பிட்ட பிறச்சினைகள் தீர்க்கப்பட்டாக வேண்டுமென்ற நிலையேற்பட்டது.

முதலாவதாக “மந்திரிப்பது, திருநீறு தருதல், வேப்பிலைப்பாடம் அடித்தல், முடிகயிறு தாயத்துப் போடல்” முதலியவை மூடநம்பிக்கையாகக் (Superstition) கருதப்பட்டன.

இரண்டாவதாகச் சித்தர்கள் யார்? அவர்களின் காலம் என்ன? சித்தர்கள் வெளிநாடுகளிலும் உண்டா? சித்தர்களின் தெய்வீக ஆற்றல் என்ன தன்மையுடையன? சித்தர்களின் பாடல்களுக்கு வரையறை செய்யப்பட்ட பொருள் உண்டா? சித்தர்களின் பாடல்கள், தமிழிலக்கியவுலகில் எந்நிலை வகிக்கின்றன? ... என்றிப்படிச் சித்தர்கள் பற்றிக் கண்டுபிடிக்கப்பட வேண்டிய ஐய விளக்கங்கள் பல.

மூன்றுவதாக, எனது கல்வி இடையீடு (dis-continuation) பெற நேரிட்டதைத் தொடர வேண்டியிருந்தது. இம்மூன்றினையும் ஒருவாறு சமாளித்தேன். நானும் எம்.ஏ. பட்டம் பெற்றேன்.

நான், மத ஆய்வுக் குழுவின் கருத்துக்களோ, செயல்களோ தமிழக வரலாற்றையும், தமிழிலக்கியத்தையும் மறந்து விடாமல் செயல்பட வேண்டுமென்று விரும்பினேன். அதன்படி, நான், தமிழக வரலாற்றுச் சான்றுகளையும், இலக்கியச் சான்றுகளையும் (both Historical and Literary Evidences) தெய்வீகக் கலைகளின் விளக்கத்துக்கும் செயல்முறைக்கும் தேடினேன். என் பணிக்குத் துணைபுரியுமாறு காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்குத் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தேன்.

காலம் கனிந்தது. அவரும் கருத்திசைந்தார். நான், மத்திய அரசின் உதவித் தொகை பெற்ற ஆராய்ச்சியாளனாகப் (U.G.C. Research Scholar) பணியேற்றேன். எனது ஆராய்ச்சிப் பணி நான்காண்டு காலம் நிகழ்ந்தது. அதன் விளைவாக, மத ஆய்வுக் குழுவுக்கு ஓர் அடிப்படையும் (Fundamental), தமிழகத்துக்கு மொழியினடிப்படையில் ஒரு வரலாற்று நூலும் அமைந்தது. எனது ஆராய்ச்சி முடிவு (Thesis) டாக்டர் பட்டம் பெறுவதற்காக (Ph.D.) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

நான், என்னுடைய ஆராய்ச்சி ஏட்டளவில் முழுமை பெற்றுவிட்ட பிறகே; அதைச் செயலளவில் வெளிப்படுத்த முற்பட்டேன். காலஞ்சென்ற

இந்தியப் பிரதமர் நேரு பெருமகனுர் இப்பொழுதிருந்திடின்; எனது இன்றைய ஆராய்ச்சிப் பணிகளுக்கும் அரசாங்கத்தின் நேரடி உதவி கிடைத்திருக்கும். ஆனுல், அது இயலாமல் போயிற்று. உதவியற்ற நிலே இருப்பினும், நான், 'எனது ஆராய்ச்சிகள், நோயினுல் தொல்லேப்படும் மக்களுக்கு உடனே பயன்படக் கூடியவை' என்பதை மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் எடுத்துக் கூறியே வருகிறேன்.

மத ஆய்வுக் குழுவின் சாதனேயே "தெய்வீக மருத்துவம்". இம்மருத்துவம் தமிழகத்துக்குப் புதியதல்ல. இது, தமிழகத்தில் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, பழைய மருத்துவமே. இதைத் தெளிவாக விளக்கிடுவதில்தான் "தெய்வீக மருத்துவம்" செல்வாக்குப் பெறுவதுள்ளது.

சித்த மருத்துவத்தில், "மணி", "மந்திரம்", "மருந்து" என்ற முப்பெரும் பிரிவுகள் (branches) உண்டு. ஆனுல், முதலிரண்டு (First two) பிரிவுகளும் தக்கார் இல்லாததாலும்; கால வேகத்தாலும்; கருத்துச் சுழற்சியாலும் வழக்கொழிந்து அழிந்தன. மூன்ருவதாகிய "சித்த மருந்து" மேலேய நாட்டினரின் மருத்துவ முறைகளால் செல்வாக்கிழந்தது; செல்வாக்கழிந்தது; செயல் குறைந்தது.

தமிழகம் எப்படி நாட்டைக் காக்கும் அரசர்களே இழந்ததோ! அப்படியே மக்களின் நலத்தைக் காக்கும் மருத்துவத் துறைகளேயும் இழந்தது.

இன்றைய தமிழக அரசு, சித்த மருத்துவத்தை (SIDDHA MEDICINE) ஏற்றுக் கொண்டுள்ளது. அதனுல், சித்த மருத்துவம் புதிய வலிவும், வளமும் பெற்று மீண்டும் மக்களுக்குப் பணிபுரிய ஆரம்பித்துள்ளது. ஆனுல், இன்றைக்குள்ள சித்த மருத்துவம் "மணி", "மந்திரம்" என்ற முதலிரண்டு பெரும் துறைகளே இழந்திருக்கின்றது. அதனுல், இன்றைக்குள்ள சித்த மருத்துவம்; ஏணிப்படிகளில் ஏறுபவன் முதலிரண்டு படிகளே விட்டுவிட்டு நேரடியாக மூன்ருவது படியில் கால் வைத்து ஏறும் நிலேயிலேயே இருக்கிறது. இந்நிலே எவ்வளவு

தொல்லைமிக்கது, ஆபத்தானது என்பதை விளக்கத் தேவையில்லை. இதை, அரசினரும், நாட்டு மக்களும், சித்த மருத்துவர்களும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், சித்த மருத்துவம் எல்லா நோய்களையும் நலப்படுத்துமென்ற நம்பிக்கை பழங்கதையாகி விடும்.

இன்றைய ஆங்கில மருத்துவத்தில், "மின்கதிர் இயக்கம்" (X-ray), "மாற்று நீல ஒளிக்கற்றைகள்" (Ultra Violet Rays), "இளஞ்சிவப்பு ஒளிக்கற்றைகள்" (Infra-red rays) முதலியவை நோயாளிக்குப் புரட்சிகரமான மாறுதல்களை அளிக்கின்றன.

இப்படி ஒளிக்கற்றைகளைப் (Light rays) பயன்படுத்தி; நோய்களை நலப்படுத்துவதை; மேலைய நாட்டினர் தங்களின் கண்டுபிடிப்பு (invention) என்று பறைசாற்றிப் பரணி பாடுகின்றனர். ஆனால், சித்த மருத்துவம், வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டு (Pre-Historic Age) ஒளிக் கற்றைகளைப் பயன்படுத்தி நோய்களை நலப்படுத்தும் முறையைப் பெற்றிருக்கின்றது. இதை, இரகசியம் (Secret) என்ற பெயரால்; சித்த மருத்துவம், காலப்போக்கில் இழந்தது. அப்பேரிழப்புப் பன்னெடுங்காலமாக ஈடுசெய்யப்படாமல் போய்விட்டது. இனியாவது, இக்கவலைக்குரிய பேரிழப்பு ஈடு செய்யப்படல் வேண்டும்.

சித்த மருத்துவத்தில் "ஒளிக் கற்றைகள்" பயன்படுத்தப்பட்டன. அப்படி, ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்தும் மருத்துவப் பிரிவே "மணி" (Light) என்றழைக்கப்பட்டது.

"மணி" என்ற மருத்துவமுறையில் பல்வேறு ஒளிக்கற்றைகள் பயன்படுத்தப்பட்டன. இப்படிப் பல்வேறு வகையான ஒளிக்கற்றைகள் பயன்படுத்தல்; நோயின் வகைக்கும் (Kind of disease), நோயின் நிலைக்கும் (the growth of the disease), நோயாளியின் உடல்நிலைக்கும் (Condition of the patient) ஏற்பவே தேவைப்பட்டன. இம்மருத்துவமுறைக்குத் தேவையான பலவகையான ஒளிக்கற்றைகள்

எரிபொருளுக்கு (fuel) ஏற்பவே தயாரிக்கப்பட்டன. அதாவது நெய், வேப்பெண்ணெ, விளக்கெண்ணெ, நல்லெண்ணெ, கடலெ எண்ணெ, மூங்கில் எண்ணெ, தவுட்டு எண்ணெ, இறைச்சிக் கொழுப்பு (fat), கற்பூரம், அரசங்குச்சி, வேப்பங்குச்சி, .... முதலிய பல பொருள்களிலிருந்து தேவையான ஒளிக்கற்றை பெறப்பட்டது. ஒவ்வொரு பொருளும், எரியும்போது தனித்தன்மையான (individual) ஒளிக்கற்றையையே அளிக்கின்றது.

இன்றைய ஆங்கில மருத்துவம் 'ஒலி அலைகளைப்' (sound waves) பயன்படுத்தி மருத்துவம் பார்க்கும் முறையில் வளர்ச்சியடையவில்லை. மேலைய நாட்டினருக்கு இன்றுவரை இப்படியொரு மருத்துவத் துறை இருப்பது தெரியுமோ! தெரியாதோ! ஆனால், சித்த மருத்துவத்தின் இரண்டாவது பெரும்பிரிவான "மந்திரம்" என்பது; ஒலி அலைகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் மருத்துவமே. இது, மருத்துவ உலகின் வரலாற்றில் புதுமையையும், புரட்சியையும் (Novelty and Revolution) உண்டாக்கக் கூடிய கருத்து. ஆனால், இது வெறும் கருத்தல்ல; இறவாப் புகழுக்குரிய இன்றமிழகம் ஈன்றெடுத்த அரிய கலைகளுள் ஒன்றாகும்.

சித்த மருத்துவத்தின் இரண்டாவது பெரும்பிரிவான "ஒலி அலை மருத்துவத்துக்குத்" (Sound Waves Treatment) தேவையான ஒலி அலைகள் பல்வேறு தன்மை படைத்தன. அவற்றுள் நோயின் வகைக்கேற்ப, நோயின் வளர்ச்சிக்கேற்ப, நோயாளியின் உடல்நிலைக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட "ஒலி அலையே" (Selected Sound Wave) மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்பட்டது.

சித்த மருத்துவத்துக்குத் தேவையான ஒலி அலைகள்; பல்வேறு இசைக்கருவிகளின் மூலமும்; வாயினால் மந்திரங்களைச் சொல்லுதல் (உருப்போடல்) மூலமும் பெறப்பட்டன. குறிப்பாக, இம்மருத்துவத்துக்கு உடுக்கை, கோடாங்கி, குடுகுடுப்பை, பம்பை, பறை, தாரை, தப்பட்டை, முரசு, கிடுமுட்டி, கிண்ணாறை, மகுடி, வங்கியம்,

கிளிகடி கருவி, யாழ், குழல், ... முதலிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

[அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் "இசையின் மூலம் தாவரங்களைச் செழிப்பாக வளர்க்க முடியும்" என்று கண்டுபிடிக்கப் பட்டது எண்ணிப் பார்த்தற்குரியது.]

"<u>தமிழர், வரலாற்றுக்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்பிருந்து 'ஒளிக் கற்றை'களையும், 'ஒலி அலை'களையும் பயன்படுத்தி மருத்துவம் பார்த்து வருகின்றனர்</u>" என்ற உண்மை; தமிழினத்தை உலகின் முதல் இனம், தலைசிறந்த இனம் என்று மெய்ப்பிக்கும் அரிய சான்றாகும்.

இன்றைய சித்த மருத்துவத்தில் இடம் பெறாத "மணி", "மந்திரம்" என்ற இருபெரும் மருத்துவத் துறைகளின் இணைப்பே "தெய்வீக மருத்துவம்". எனவே, சித்த மருத்துவத்தின் பெரும்பகுதியே இத்தெய்வீக மருத்துவம்தான் என்பது வெளிப்படை. அதனால், தெய்வீக மருத்துவமுறைகளைத் தன்னுள் பெறாத சித்த மருத்துவம் முழுமையான ஒரு மருத்துவத் துறையாகாது.

சித்த மருத்துவத் துறையின் வளர்ச்சியும், வலிமையும், பொலிவும், வருங்கால வாழ்வும்; அது தெய்வீக மருத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்தான் இருக்கிறது. (The growth, strength, prosperity and future of SIDDHA MEDICAL field depends on the acceptance of the "Mystical Treatment.")

தெய்வீக மருத்துவத்தின் மூலம் "மூளைக் கோளாறு" (Mental Disorders), "நரம்புத் தளர்ச்சி" (Nervous Disabilities), "ஆறாத புண்" (Unhealable wound), "நினைவாற்றல் குறைபாடுகள்" (Defects in Memory power), "செறிமானக் கோளாறுகள்" (Digestive Troubles), "உடல் எரிச்சல்" (Burning Sensation), "வயதுக்கேற்ற வளர்ச்சியின்மை" (Unusual growth), ... முதலிய நோய்களை

நலப்படுத்தலாம். இன்னும் ஆராய்ச்சி செய்தால்; பல நோய்களை நலப்படுத்தலாம்.

இச்சாதனை, காலஞ்சென்ற சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவு மேதை, அறிவியல் கலைஞர், உயர்திரு எம்.என்.ராய் அவர்களின் முயற்சியேயாகும். இதுவரை, உலகம் அவரை ஓர் உலகப் பொதுவுடமை அரசியல்வாதியாக மட்டுமே அறிந்திருந்தது. இனிமேலாவது அவர் ஒரு சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையாளர் என்பது அனைவராலும் அறியப்படட்டும்.

அவர், தான் உருவாக்கிய "பகுத்தறிவு இயக்கத்தை"த் (Rationalist Party) தன் காலத்திலேயே கலைத்துச் சென்றிட்டார். அதற்குக் காரணம் அவருக்குக் கட்சி அரசியலில் (Party Politics) நம்பிக்கையில்லை. அவர், தான் தோற்றுவித்த மத ஆய்வுக் குழு உலக அமைப்பாக வளர வேண்டும்; மக்களின் அன்றாட வாழ்வுக்குப் பெருந்தொண்டு புரிய வேண்டும் என்று கனவு கண்டார். அவரது கனவின் ஒரு பகுதி நனவாகி விட்டது. அடுத்த பகுதி விரைவில் செயலாகும்.

"தெய்வீக மருத்துவம்" உலகமெங்கும் பரவிச் செயல்பட்டால்; மக்களின் பெருந்துயர் பெருமளவில் நலமாகும். இம்மருத்துவ முறை, தமிழரின் தொன்மைக்கும், பழம்பெருமைக்கும், வரலாற்றுச் சிறப்புக்கும், அறிவாற்றலுக்கும் அணி செய்வதாகும்.

இவற்றை அனைவரும் ஓர்ந்துணரும் பொன்னாளே மருத்துவ உலகின் நன்னாள். அந் நன்னாளே தமிழர் பெருமை பரவும் திருநாள்.

**சித்தர்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: குருதேவர் அவர்களின் கைப்பட எழுதி வைத்திருந்த குறிப்பேட்டின் நகல்.//**

# தனிமனித வளர்ச்சியே தேவை!

♦ தனிமனித விழிச்சி தேவை! தனிமனித எழுச்சி தேவை! தனிமனித மலர்ச்சி தேவை! தனிமனித வளர்ச்சி தேவை! தனிமனிதச் செழுச்சி தேவை!

♦ தனிமனிதராலேயே சமுதாயப் புரட்சியைச் செய்யமுடியும்.

♦ தனிமனிதராலேயே அரசியலில் மறுமலர்ச்சியை உண்டாக்க முடியும்.

♦ தனிமனித வரலாறே ஒரு காலத்தின் வரலாறு.

♦ தனிமனிதராகிய எமது வரலாறே எமது காலத்தின் உலக வரலாறு.

♦ தனிமனிதராகிய எமது வெற்றியே எமது மொழியின் வெற்றியாக, இனத்தின் வெற்றியாக, நாட்டின் வெற்றியாக இருந்திடும்.

♦ தனிமனிதராலேயே மிகப்பெரிய மாற்றங்களைச் செய்யமுடியும். கார்ல் மார்க்சு என்ற தனிமனிதரின் தத்துவமே ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களின் வறுமையையும், வெறுமையையும் வெல்லும் சத்தியைத் தோற்றுவித்திருக்கிறது.

♦ தனிமனிதக் கனவுகளே நமது கலைக்கோயில்கள்.

♦ தனிமனிதச் சாதனைகளே நமது புராண இதிகாசங்கள்,

......

**// குருதேவர் அவர்கள் 18/11/1986இல் எழுதிய ஓர் அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள். //**

***"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."***



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவருடைய போதனைகளில் சில:

*"தமிழரின் மத விடுதலையே!; தமிழின மொழி விடுதலையை உருவாக்கிடும்!"*

***"தமிழரால் தங்களின் மதத்தை மறுத்தோ!, வெறுத்தோ! அன்றி மறந்தோ! துறந்தோ! புறக்கணித்தோ! தங்களுக்குத் தேவையான தமிழின மொழி விடுதலையைப் பெற முடியாது!"***

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com